# எல்பிடிய பிரதேச சபை

## காலி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 10 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான எல்பிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 22 அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய ரூபா 744,847 தொகைக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 744,847 தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான செயற்திட்டமொன்றான அமுகொட இடைப் பாதை இடைத் தொடர்பு சீமெந்து கற்கள் பரப்புவதற்காக நிர்மாண வேலையின் தடுத்து வைத்தல் தொகையென செலுத்தப்பட்டிருந்த ரூபா 49,565 தொகை ஆண்டிற்கான மூலதன செலவுகள் என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 49,565 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருநதன.

(இ) முன்னைய ஆண்டிற்கான நிர்மாண வேலைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 32,148,318 தொகைக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அந்த நிர்மாண வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 32,148,318 தொகை நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் வரவு வைக்கப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் கணக்கு மீதி ரூபா 32,148,318 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 1,247,565 செலவிடப்பட்டு சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த எல்ல ஊரன்வல தலாவ பிரதேசங்களுக்கு சனசமூக நிலையம் மற்றும் ரூபா 770,250 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த ஆனந்த கனிஷ்ட வித்தியாலயத்திற்கு அண்மையில் சிறுவர் பூங்காவிற்காக மொத்தம் ரூபா 2,017,815 இற்கான நிலையான சொத்துக்கள் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டின் போது சபையினால் எல்பிட்டிய சிறுவர் விளையாட்டு மைதானத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 1,444,500 இற்கான விளையாட்டு உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,083,375 என மூலதனப்படுத்தப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு தொகையின் மீதி ரூபா 361,125 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது நன்கொடை காணி உறுதி ஒன்றின் மூலம் சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 300,000 தொகை பெறுமதியான அம்பகஹவத்த/ கனத்தவத்தை என அழைக்கப்படும் காணியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 12,165,455 தொகை எனினும், அவை நிதிக் கூற்றுக்களில் ரூபா 10,000,000 தொகை என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 2,165,455 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,304,783 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 2,225,000 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 79,783 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

07 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 33,883,774 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 63,800,268 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளது வரை ஆக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கைகள், காலப்பகுப்பாய்வு மற்றும் சமப்படுத்தப்பட்டிருந்த வைப்புக் கணக்குகள் ஆகிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,006,487 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,432,236 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வீதவரி மற்றும் ஏக்கர் வரி

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 6,490,272 ஆக காணப்பட்டதுடன் நிலுவை ஏக்கர் வரி ரூபா 250,892 ஆகும். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 10,000 விட மிகையான நிலுவை வீதவரி மீதிகள் காணப்பட்ட 47 நபர்களால் ரூபா 1,194,333 இற்கான நிலுவை வரி செலுத்தல் தொடர்ந்தும் வரி செலுத்தத் தவறியுள்ளனர்.

(ii) ரூபா 6,490,272 இற்கான நிலுவை வீதவரி மற்றும் ரூபா 250,892 இற்கான நிலுவை ஏக்கர் வரி 1987 இன் 15 இலக்க கொண்ட பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாராந்த சந்தை வாடகை

-------------------------------------------

2012 ஆண்டிற்காக 2014 மார்ச் 30 திகதி கணக்காய்வு பரிசோதனை சந்தர்ப்பம் வரை அட்டகொஹுட வாராந்த சந்தையின் நிலுவை வாடகை ரூபா 19,166 தொகை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,440,583 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 9,543,000 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 கடை வாடகை

-------------------------

சபைக்குச் சொந்தமான பொதுச் சந்தையின் சிறப்பு வர்த்தக நிலையத்தின் மற்றும் நடைபாதைக் கடைகள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் த.ப.பா/ப.பா.கொ/2010/01 கொண்ட மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்று நிருப அறிவுரைகளின் பிரகாரம் அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒரு முறை நாளது வரை ஆக்க

வேண்டும். எனினும், இவ் அனைத்து கடைகளினதும் உடன்படிக்கைகளும் 03 வருடங்களை விட பழமை வாய்ந்த உடன்படிக்கைகள் என அவதானிக்கப்பட்டது.

(ii) மேற்கூறிய சுற்றுநிருபத்தின் பந்தி 6 இன் பிரகாரம் குறைந்த பட்சம் 05 வருடங்களுக்கு ஒரு முறையேனும் கடை வாடகை தொடர்பாக புதிதாக பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் இந்த அனைத்து கடைகளுக்கும் புதிய பெறுமதிப்பீட்டு பெறுமதி 2013 மே மாதத்தில் சபைக்கு கிடைத்திருந்த போதும் கணக்காய்வுத் திகதியாகிய 2014 மார்ச் 25 வரை அப் புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே ரூபா 1,272,645 இற்கான வருமானம் ஒன்று சபைக்கு அறவிடப்பட்டிருந்தது.

(iii) உடன்படிக்கையின் நடவடிக்கைகளின் பிரகாரம் குறிப்பிட்ட தினத்தில் வாடகை செலுத்தல் தொடர்ச்சியாக 03 மாதங்கள் வாடகை செலுத்தாத விடத்து நிலுவை வாடகையை அறவீடு செய்து, அக் காரணத்தின் அடிப்படையில் வாடகையாளரை அகற்றுவதற்கு பிரதேச சபைக்கு அதிகாரம் இருந்த போதும், 23 கடைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------------

சபையில் கடமையாற்றி மாற்றம் பெற்றுச்சென்றுள்ள, ஓய்வுபெற்றுள்ள, கடமையை விட்டு விளகி சென்றுள்ள 07 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 33,534 தொகையொன்று 01 முதல் 06 வருடங்கள் வரையான காலம் நிலுவையாகக் காணப்பட்டது.

3.2 செயற்படாத சொத்துக்கள்

---------------------------------------------

2013 ஜுன் 05 திகதி வெளியிட்டிருந்த இலக்கம் PC/MD/PR/2013 கொண்ட ஜனாதிபதி செயலாளரினால் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறித் தொகுதிகளை 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அவற்றுவதற்காக வேலைத் திட்டம் ஒன்றினை தயாரிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்று மற்றும் பவுஸர் ஒன்று 05 வருடங்களை விட மிகையான காலம் துருப்பிடித்து சபை வளவில் காணப்பட்டது என 2014 மார்ச் 26 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் சபையின் விஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்